பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 15 | வெள்ளிக்கிழமை | 01.11.2024 | அதிர்வு 91

## அநுர அரசாங்கமும் ஊழலுடன் சம்பந்தம்

### இப்படிச் சுமந்திரன் சந்தேகம்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான புதிய அரசும் ஊழலுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றது போல் 06

### அநுர தலைமையிலான புதிய அரசில்

# அமைச்சுப் பதவிகள் பெறுவதற்கான சந்தர்ப்பம் வந்தால் பரிசீலிப்போம்!

### தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வந்தால் அதனைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 05

### சமஷ்டியே தீர்வு எனக் கூறும்

# தமிழரசு இருக்கும்போது நிழல் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டிய தேவை எதுவுமில்லை

### ஊடக சந்திப்பில் சுமந்திரன் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

“அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கூட சமஷ்டியே தீர்வு என ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே, சமஷ்டியே தீர்வு எனக் கூறி வந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியான அசல் நாங்கள் இருக்கும்போது நிழல்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவையில்லை.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் 05




ஊழல், மோசடி, குளறுபடிகள் தொடர்பான நபர் ஒருவரை வடக்குடன் பெரிதும் தொடர்பு பட்ட ஒரு சபையின் தலைவராக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவின் அரசு நியமித்தமையை ஒட்டி அந்த நபரின் குணாதிசயத்தை வெளிப்படுத்துவதற்காக அவர் தொடர்பில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலனின் அனுபவத்தை நேற்று இப்பத்தியில் விவரித்து இருந்தேன்.

அதை வாசித்து விட்டு நேற்று எனக்கு பலர் தொலைபேசி அழைப்புகள் எடுத்தனர். அவை பெரும்பாலும் அந்நபர் தொடர்பான பல்வேறு விடயங்கள் பற்றிய முறைப்பாடுகளாக இருந்தன. அவற்றையெல்லாம் விவரிப்பது என் வேலை அல்ல. அதனால் விட்டுவிட்டேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ஐ.தே. கட்சி, சுயேச்சைக் குழு என்று பல தரப்புக்களுடன் தேர்தலில் நின்ற இந்த நபர், இப்போது தேசிய மக்கள் சக்தியின் பெயரை கெடுப்பதற்கு அதனோடு அணி சேர்ந்து இருக்கிறார் 05



# ஹரக் கட்டாவின் உதவியாளர்கள் கைது

280 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருள்களுடன் ஹரக் கட்டாவின் உதவியாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து பிலியந்தலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரும் நாட்டில் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஹரக் கட்டா மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணும் ஆமி சூட்டி எனும் நபரின் போதைப்பொருள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பிரதான உதவியாளர்கள் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

41 மற்றும் 53 வயதான சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

# அடுத்த சில நாள்களுக்கு பல பகுதிகளில் மழை

அடுத்த சில நாள்களுக்கு நாட்டின் பல பகுதிகளில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளையில் மழை பெய்யக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.



# பொதுத் தேர்தல் தொடர்பான செயற்பாட்டறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பு

பொதுத் தேர்தல் தொடர்பில் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றைத் தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முன்வைத்த சமர்ப்பணங்களுக்கமைய இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடத்துவது அரசியல் அமைப்பிற்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கக் கோரி பொது அமைப்பு ஒன்றினால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ATTORNEY GENERAL'S DEPARTMENT

பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் சட்டத்திற்கு முரணானது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த மனு எதிர்வரும் 4 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், அதற்கமைவாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அந்தத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# கரையோர மார்க்க ரயில் சேவை தாமதம்

காலி – கிந்தோட்டை ரயில் மார்க்கத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளது.

இதனால் கரையோர மார்க்கத்திலான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

# மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி 10 வயது சிறுமி உயிரிழப்பு



பசறை – அம்பத்தன்ன பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி 10 வயதுடைய சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்,

அம்பத்தன்ன பகுதியில் வீடு கட்டுவதற்காக வெட்டி வைக்கப்பட்டிருந்த தளத்தில் மண்வெட்டியுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் நின்று கொண்டிருந்த வேளையில் மின்னல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, அவர்கள் இருவரும் பசறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் 10 வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

17 வயதுடைய சிறுமியின் சகோதரன் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிறுமியின் சடலம் தற்போது பசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# இலங்கை - ரஷ்யாவுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையே சுங்க நடவடிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பீ.பி.எஸ்.நோனிஸ் மற்றும் ரஷ்ய சுங்க சேவையின் பிரதானி வீ.ஐ.பிகலோவில் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக செயற்பாடுகளின் போது சுங்க நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க வகையில் முன்னெடுக்கும் நோக்கில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதும் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள்களின் விலை குறைப்பு



நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதன்படி, இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 6 ரூபாவினால் குறைத்து 371 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அதன் புதிய விலை 313 ரூபாவாகும்.

ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 311 ரூபா என்ற விலையிலேயே மாற்றமின்றி தொடரும் எனவும் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 283 ரூபா என்ற விலையில் மாற்றமின்றி தொடர இலங்கை இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 183 ரூபா என்ற விலையில் மாற்றமின்றி தொடர இலங்கை இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று எனக்கு நேற்று வந்த தொலைபேசித் தகவல்கள் விவரித்தன.

ஒரு நபர் குறித்து இவ்வளவு முறைப்பாடுகளா, அவற்றையெல்லாம் கவனிக்காமல் இந்த நியமனமா என்று எனக்குள் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

இதற்கிடையில் ஒரு விடயத்தை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று இருக்கின்றது ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு.

பனை அபிவிருத்திச் சபை நியமனம் தொடர்பிலேயே அந்த அமைப்புக் கேள்வி எழுப்பியுள்ளது.

தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில், அக்டோபர் 29 அன்று, ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது, இலங்கை தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ள தாவது:

அக்டோபர் 10ஆம் திகதி அன்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவிக்கு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை நியமிக்கப்பட்டமையோடு, அதைத் தொடர்ந்து 12 நாள்கள் இடைவெளியில் அவர் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக விநாயகமூர்த்தி சகாதேவன், அக்டோபர் 22 அன்று அதே பதவிக்கு நியமிக்கப்பட்டார். மேலும், தேர்தல்கள் ஆணைக்குழு விதித்துள்ள தடைகளுக்கு மத்தியிலும் தலைவர்கள் மாற்றம் மற்றும் பல புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கு பொறுப்பான அமைச்சர் அனுமதி அளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் 25 அன்று இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் மற்றும் தேர்தல் சட்டத்தில், குறிப்பாக அரச அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறாமல், தேர்தல் காலத்தில் அரச நிறுவனங்களில் எந்தவொரு ஆள்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள் அல்லது இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முக்கியமான தேர்தல் காலகட்டத்தில் சட்டத்தை மதிக்காத வகையில் அரசாங்கம் நடந்துகொள்வது கேள்விக்குரிய சூழ்நிலையை எழுப்புகிறது.

இவ்வாறான நியமனங்கள் மூலம், பொதுமக்களின் நம்பிக்கை பலவீனப்படுத்துவதுடன் தேர்தல் நடைமுறையின் நேர்மைக்கும், ஜனநாயக செயல்முறையின் நியாயத்தன்மையும் கேள்விக்குட்படுத்தப்படலாம். இது குறித்து இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்புக் கோருகிறது.

பொது நிறுவனங்கள் மீதான அரசியல் பக்கச்சார்பு அல்லது தேவையற்ற செல்வாக்கின் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக பொதுத் தேர்தல் முடியும் வரை பொது நிறுவனங்களில் இத்தகைய நியமனங்களை இடைநிறுத்துமாறு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு மேலும் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனமானது இவ்வாறான நிலைமைகளை தொடர்ந்தும் கண்காணிப்பதோடு, பொது நிறுவனங்களில் நெறிமுறை மற்றும் சட்ட வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தமிழரசு இருக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"மாற்றத்துக்கான தேர்தல் எனச் சொல்லப்படுகின்றது. மாற்றத்தின் ஆரம்பம் என ஜனாதிபதித் தேர்தலைச் சொல்கின்றனர். ஒருவகையில் அது சரிதான். காலம் காலமாக இரண்டு கட்சிகள்தான் மாறி மாறி ஆட்சி செய்த காலத்தில் இருந்து, தற்போது பாரிய மாற்றமாக மூன்றாவது தரப்பு ஆட்சியைப் பிடித்துள்ளது.

அவர்கள் ஆட்சியைப் பிடிக்க ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். ஊழல் கேடான அரசியலில் இருந்து மாற்றம் வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதனால்தான் 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக இருந்த வரை நாட்டை விட்டுத் துரத்தினர்

அப்படிச் செய்தும் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் வராததால் இரண்டரை வருடங்கள் காத்திருந்து, தேர்தல் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

மாற்றம் வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அவர்கள் முன் தேசிய மக்கள் சக்தியினர் மட்டுமே இருந்தனர். அதனால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர்.

ஆனால், தமிழ் மக்கள் வாழ்க்கையில் அரசியலில் 75 வருடங்களுக்கு மேலாக நாங்கள் மாற்றத்தைத் தேடுகின்றோம். அதற்காகப் பல வழிகளில் போராடி, பல உயிர்களை இழந்துள்ளோம்.

எங்களுடைய மக்கள் 75 வருட காலமாக நியாயமான அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். தமிழ் மக்கள் விரும்பிய இந்த அரசியல் மாற்றத்துக்குத் தெற்கு மக்கள் பங்குதாரர்களாக வரவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிவின் வரைபடத்தில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அநுரகுமாரதிஸாநாயக்கவுக்கும் கிடைத்த வாக்குகளில் பெரிய வித்தியாசம் இல்லை என்பது தெளிவாகத் தெரியும். அதாவது சிங்கவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைத்த தவிர ஏனைய பகுதியில் அநுரவுக்கு வாக்குகள் கிடைக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மக்கள் 75 வருட காலமாக ஒரே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். அதிகாரங்கள் சரியாகப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் வடக்கு, கிழக்கு மக்கள் உள்ளனர்.

சமஷ்டி கட்டமைப்பாக அது மாற வேண்டும். அந்த நிலைப்பாட்டை நாங்கள் முன்கொண்டு செல்ல நாடாளுமன்றத்துக்கு மிகப் பெரும் பலத்துடன் செல்ல வேண்டும்.

சமஷ்டி என்ற எண்ணத்தையே இழிவாகப் பேசி அதனைப் பழித்து உரைத்துக்கொண்டிருந்தஅகில இலங்கைதமிழ்க் காங்கிரஸ் கூட சமஷ்டிதான் தீர்வு என ஏற்றுக்கொண்டுள்ளனர்

எனவே, நாம் முன்வைத்த சமஷ்டி தீர்வையே அனைத்து தமிழ் கட்சிகளும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே,அசல்நாங்கள்இருக்கும்போது நிழலுக்கு வாக்களிக்க வேண்டிய தேவை யில்லை." - என்றார்.

---

## அமைச்சுப் பதவிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போது அமைச்சுப் பதவிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:-

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலத்தில் அமைச்சுப் பதவிகள் சம்பந்தமாகப் பல விதமான கேள்விகள் எங்களிடத்தே கேட்கப்படுகின்றன. குறிப்பாக நான் கலந்துகொண்ட பல கூட்டங்களில் மக்களின் எதிர்பார்ப்பும் அப்படியாகத்தான் இருந்தது.

முன்னைய காலத்தில் நாங்கள் அமைச்சுப் பதவிகளை எடுக்கக்கூடாது, ஒரு நிலையான தீர்வு வருகின்ற வரைக்கும் மத்திய அரசில் நாங்கள் பங்குபெறக் கூடாது என்கின்ற கருத்துக்கள் நிலவின.

ஆனால், அது கட்சியினுடைய கொள்கை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அமைச்சுப் பதவிகளை எடுத்த ஒரு காலகட்டமும் இருந்திருக்கிறது.

ஆகவே, அப்படியான ஒரு சூழ்நிலை வருகின்றபோது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அந்த நேரத்தில்தான் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

எனினும் என்னுடைய சொந்த நிலைப்பாடு செல்லையா குமார சூரியரைப் போலவோ அல்லது லக்ஸ்மன் கதிர்காமரைப் போலவோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவைப் போலவோ தனி ஒரு அமைச்சராக அமைச்சரவையில் போய் சேருவதென்பது மக்களுக்கு நன்மை பயக்காது. அதனால் எங்களுக்குரிய அரசியல் தீர்வும் காண முடியாத நிலைமை.

ஆனால், முருகேசு திருச்செல்வம் போல் கட்சி சார்பாக - கட்சியினுடைய தீர்மானமாக மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு அமைச்சரவையில் சேர்ந்தார். ஆனால், அமைச்சராக இருந்தும் நடைமுறைப்படுத்த முடியவில்லை எனத் தெரிந்த உடனேயே கட்சியின் கட்டளைப்படி அரைவாசிக் காலத்திலேயே அமைச்சுப் பதவியை அவர் இராஜிநாமா செய்து வெளியே வந்தார்.

அது வித்தியாசமான ஒரு விடயம். எங்களுடைய மக்களையும் கட்சியையும் பிரபலப்படுத்தி இரண்டோ, மூன்று பேர் அமைச்சரவையில் சேர்ந்திருந்து செயற்பட்டு எங்களுக்கான தீர்வுகளைப் பெறுவதென்பதும் நாங்கள் கண்கொண்டும் பார்க்க மாட்டோம். அப்படியான தெரிவு எங்களுக்குக் டையவே கிடையாது என்ற நிலைப்பாட்டில் இருக்கக்கூடாது.

ஏனெனில் காலங்கள் மாறும். நிலைமைகள் மாறும். ஆகையினால் அதற்கான ஒரு சந்தர்ப்பம் இருந்தால் அதனையும் நாங்கள் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு ஆகும்." - என்றார்.





# காலிமுகத்திடலுக்கு அருகில் விபத்தில் 7 பேருக்குக் காயம்

கொழும்பு – காலிமுகத்திடலுக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் 07 பேர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டோ ஒன்று மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 05 பேரும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வசாவிளான் - அச்சுவேலி வீதி இன்று திறப்பு

(ந.லோகதயாளன்)

வசாவிளான் மத்திய கல்லூரியூடாக அச்சுவேலி நோக்கிச் செல்லுகின்ற வீதி இன்று வெள்ளிக்கிழமை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள இந்த வீதி 34 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது.

இந்த வீதியைத் திறந்து மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழிசமைக்குமாறு நீண்ட காலமாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவால் இன்று காலை 6 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக இந்த வீதி திறந்து வைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அநுர அரசாங்கமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிகின்றது என தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போது பார் லைசன்ஸ் விவகாரம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பார் லைசன்ஸ் விவகாரத்தில் தாம் ஆட்சிக்கு வந்து மூன்று நாட்களில் அதன் பெயர் விபரங்களை வெளியிடுவதாகத் தேசிய மக்கள் சக்தியினர் சொல்லியிருந்தார்கள். ஆனால், இந்த விடயத்தில் இதுவரை எந்த விபரங்களையும் அவர்கள் வெளியிடவில்லை.

நானும் விபரத்தை வெளியிடச் சொல்லி பகிரங்கமாகக் கேட்டிருந்தேன். அதுமட்டும் இல்லாமல் அந்த விபரங்களை வெளியிடாவிட்டால் நீங்களும் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டதாகவே சந்தேகம் வருகின்றது என்றும் சொல்லியிருந்தேன்.

ஆனால், இப்ப அந்தச் சந்தேகம் விலகி விட்டது. ஆக அவர்களும் ஊழலில் சம்பந்தப்பட்டு இருக்கின்றார்கள் போல்தான் தெரிகின்றது. உண்மையில் அப்படி உல்லையெனில் ஏன் இன்னமும் வெளியிடாமல் இருக்கின்றார்கள்.?" - என்று கேள்வியெழுப்பினார்.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

"மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."

- சீனப் பழமொழி -





# கடல் நீரின் உப்புத்தன்மை குறைவடைவதுதான் அதிக கிளத்தி மீன்கள் இறப்பதற்குக் காரணம்!

## ‘நாரா’ நிறுவனப் பணிப்பாளர் அருளானந்தன் விளக்கம்

(ந.லோகதயாளன்)

கிழக்கு கடற்கரையில் கடற் படுக்கையை அண்டி வாழும் கிளத்தி மீன்கள் பெருமளவில் இறப்பதற்கு பருவகால கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றத்தால் கடல் நீரின் உப்புத் தன்மை குறைவடைந்ததே காரணம் என “நாரா” நிறுவனப் பணிப்பாளர் க.அருளானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விவரம் தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு:–

தென்மேற் பருவ பெயர்ச்சிக் காலத்திலிருந்து வடகீழ் பருவ பெயர்ச்சிக் கால மாற்றத்தின் போது காற்று திசை மாற்றதினால், அதுவரை இலங்கை – இந்திய கிழக்கு கரையோரமாக வடக்கு நோக்கிப் பாயும் கிழக்கு இந்திய கரையோர கடல் நீரோட்டம், திசை மாற்றமடைந்து வட வங்காள விரிகுடாவிலிருந்தது தெற்கு நோக்கி இந்திய கிழக்கு கரையோரமாக பாய்ந்து, இலங்கையின் கிழக்குக் கரையை வந்தடைகிறது. இந்த நீரோட்டம் தொடந்து இலங்கையின் தெற்கு முனையில் மேற்கு நோக்கித் திரும்பி அரபிக் கடலை சென்றடைகிறது.

இந்த இந்தியக் கரையோர கடல் நீரோட்டம் பிரமபுத்திரா, கங்கை போன்ற நதிகளின் நன்நீரை கிழக்குக் கடற்கரைக்கு கொண்டு வருவதால் கடல் நீரின் உப்புத்தனமை குறைவடைகிறது. உப்புத்தன்மை குறைபாடு கடற்படுக்கையை அண்டி வாழும் கிளத்தி போன்ற மீன்களின் உடற் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் நலிவடைந்த மீன்கள் கடல் நீர் மேற்பரப்பிற்கு வருகின்றன. அலையை எதிர்த்து நீந்த திராணியற்ற இம் மீன்கள் அலையில் சிக்கி கரையில் ஒதுக்கப்படுகின்றன.

இந்த நிகழ்வு ஒவ்வொரு வருடமும் ஜப்பசி மாத காலத்தில் நிகழும் போதும், உப்புத்தனமை குறைபாட்டிற்கான காரணமான நன்நீரின் அளவு பெரு ஆறுகளின் நீரேந்து பகுதியின் மழை வீழ்ச்சியில் தங்கி இருக்கிறது.

இந்த மழை வீழ்ச்சியின் அளவை இந்து சமுத்திரத்தின் கிழக்கு (கிழக்கு ஆபிரிக்க கடல்) மேற்கு (சுமத்திரா) கடல் நீர் வெப்ப வேறுபாடு தீர்மானிக்கிறது. இது இந்தியக் கடல் இருமுனை என்றழைக்கப்படுகின்றது. 2023 இலிருந்து இந்திய மேற்கு கடல் நீரின் வெப்பம் அதிகரித்து காணப்படுவதால், தற்காலப்பகுதியில் இந்திய கடல் இருமுனை நேர் பெறுமானத்தை அடைந்திருக்கிறது. நேர் பெறுமான காலப்பகுதியில் வங்காள விரிகுடாவினுள் நீரகற்றும் பெரு ஆறுகளின் (இராவட்டி, பிரமபுத்திரா, கங்கா, கிருஷ்ணா, கோதாவரி, மகாவலி) நீரேந்து பகுதியில் அதிக மழை வீழ்ச்சி பெறப்படுகிறது. இதனால் அதிகளவு நன் நீர் இந்திய கரையோர கடல் நீரோட்டம் மூலம் கிழக்கு கரையை வந்தடைந்து கடல் நீரின் உப்புத்தன்மையை அதிகளவு குறைவடய செய்து மீன் இறப்பிற்கு காரணமாக அமைகிறது. கடந்த தாசப்பத்தில் இந்திய கடல் இருமுனை நேர் பெறுமானத்தை 2016 மற்றும் 2019 ஆண்டு காலப்பகுதியில் அடைந்திருந்தது. – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கள்ள மௌனம் ஏன்?

“பெருந்தோட்ட மலையக மக்களின் காணி உரிமை பற்றி திட்டவட்டமாக எதுவும் பேசாமல் ஜே.வி.பி. தலைமை கள்ள மௌனம் காக்கின்றது. வெறுமனே மலையக மக்கள் தொடர்பில் அனுதாப வார்த்தைகளை மாத்திரம் பேசி அது வாக்குச் சேர்க்கின்றது.”

- இவ்வாறு புதிய ஆட்சி பீடத்தைக் கடுமையாக விமர்சித்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இப்படி கள்ள மௌனம் காக்கும் விடயம் புதிய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை தனித்து மலையக மக்களின் பிரச்சினைக்கு மாத்திரமானதல்ல, சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் விடயத்திலும் கூட இத்தகைய கள்ள மௌனத்தைத்தான் புதிய ஆட்சிப் பீடம் பேணி நிற்கின்றது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தன்னுடைய தீர்வு என்ன என்பதை மேலோட்டமாக ஜனாதிபதி தேர்தலின் போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரியப்படுத்தினாராயினும், ஜனாதிபதியாக அவர் பதவியேற்ற பின்னர் தீர்வுக்கான தமது வழித்தடத்தை - பாதையை - செல்நெறியை - அவர் வெளிப்படுத்துபவராகத் தெரியவில்லை. அந்த விடயத்தில் மனோ கணேசன் சுட்டிக் காட்டுவது போன்று கள்ள மௌனத்தைத் தான் அவர் பேணுகின்றார்.

ஜனாதிபதியாக வரும் முன்னர் இலங்கையின் அரசியலோடு சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் முந்திக்கொண்டு கருத்துக்களை வெளியிட்டு, பல தரப்புகளையும் தாறுமாறாக -காட்டமாக - விமர்சித்து வந்த அவர், இப்போது அதிகாரத்துக்கு வந்த பின்னர் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பில் தமது அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் கள்ள மௌனம் பேணுகின்றார் என்பது எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

எதிரணியில் இருந்த போது, கடந்த 15 வருடங்களாக, இந்த நாட்டில் கொடூரமாக - மிருகத்தனமாக - மோசமாக - நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகக் காட்டமாக குரல் எழுப்பி வந்தவர் அநுரகுமார திஸநாயக்க.

இப்போது அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், அவரது சட்டத்துறை பிரிவு பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான அவரது நிலைப்பாட்டை புதிய வியாக்கியானப்படுத்தி கருத்து கூற முற்படுகின்றது. ஆனால் அது தொடர்பில் நிலைமையைத் தெளிவுபடுத்தாமல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கள்ள மௌனம் பேணுகின்றார்.

எதிரணியில் இருந்த போது எல்லா விடயங்களிலும் காட்டமாகக் குதித்த அவர், இப்போது பதவிக்கு வந்ததும் அந்த விடயங்களில் எல்லாம் அமுக்கி வாசிக்கின்றார். அதைத்தான் மனோ கணேசனும் ஏனைய தலைவர்களும் அவர் கள்ள மௌனம் பேணுகின்றார் என்று விமர்சிக்கின்றனர்.

தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத வாக்குகளை சுவீகரிக்க வேண்டும் என்பதற்காக அதற்கு எதிராகக் கருத்துச் சொல்ல விரும்பாமல் ‘மௌனம் கலக நாஸ்தி’ என்ற கருத்தில் அவர் அமைதி பேணுகின்றார். நீதி, நியாயத்தை - சரியானதை - சிறுபான்மையினருக்கு உரியதை - வெளிப்படையாகப் பேச போய் வாக்குகளை ஏன் இழக்க வேண்டும் என்ற கருத்தில் அவர் இவ்வாறு அமைதி காத்து தப்பி பிழைக்கலாம் என்று நினைக்கின்றார் போலும்.

தனது கட்சியையும், தமது மக்களையும், நாட்டையும் வழிநடத்த வேண்டிய தலைமைத்துவ பண்புள்ள ஒருவருக்கு இத்தகைய கள்ள மௌனம் பொருத்தமானது அல்ல. இதுவரை காலம் வெளிப்படையாக பேசி வந்த தனது பண்பியல்பை அவர் மாற்றிக் கொள்வது என்பது அவரது அரசியல் கருத்துநிலைப்பாட்டுக்கான அஸ்தமனமாகவே கொள்ளப்பட வேண்டும்.

வெளிப்படையாகப் பேசி, வெளிப்படையாகச் செயல்பட்டு, வெளிப்படையாக விடயங்களை முன்னெடுத்து, நாட்டை வழி நடத்துவதன் மூலமே ஓர் ஐக்கியமான - அமைதியான - நல்லிணக்கம் நிலவும் - இலங்கை தேசத்தை அவரால் கட்டி எழுப்ப முடியும். அவரது மௌனம் - அதுவும் இது போன்ற கள்ள மௌனம் - அரசியல் ரீதியில் ஆரோக்கியமானது அல்ல.



AN EVENT BY
ARYA CANADA INC
PRODUCED BY
ROYAL LEPAGE Associates Realty
Kayan Kanesalingam & Shean Sinnarajah
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY
VARAN KNOWS MORTGAGES
905-999-7193
ANDREA JEREMIAH ft. KARTHIK DEVARAJ & BAND
Live
NOVEMBER 1ST, 2024
CANADA EVENT CENTRE
300 Water St, Whitby, ON L1N 9B6
DOORS OPEN 7:00 PM
PLATINUM SPONSOR
SANDHURST FAMILY DENTAL CLINIC
CULINARY PARTNER
FUSION BY T
MEDIA PARTNER
east FM 102.7
TICKETS ON
eventbrite
Hotline 647-848-1342 | www.aryacanadainc.com | AryaCanadaInc




Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.




AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230



# விஜய் மீது எனக்கு வன்மம் இல்லை

## வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவிப்பு

"விஜய்யின் உரையில் இருந்த தெளிவற்ற விஷயங்களை சுட்டிக் காட்ட வேண்டிய இருந்ததால் சுட்டிக் காட்டினேன். விஜய் மீது எனக்கு எந்த தனிப்பட்ட வன்மமும் இல்லை."

– இவ்வாறு வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திருமாவளவன் குறிப்பிடுகையில்,

"எடுத்த எடுப்பிலேயே 30 சதவீத வாக்குகளை விஜய்யால் வாங்க முடியுமா? எம்.ஜி.ஆர் கட்சி தொடங்கும் முன்பே அவர் தி.மு.க. காரர். தேர்தல் அனுபவம் உள்ளவர். அவருக்குப் பின்னால் வந்த எந்த நடிக்க.ருக்கும் எம்.ஜி.ஆருக்கு இருந்த பின்னணி இல்லை. எம்.ஜி.ஆரின் தொடர்ச்சியாகத்தான் ஜெயலலிதா ஆட்சியில் அமர்ந்தார். விஜய்யின் உரையில் இருந்த தெளிவற்ற விஷயங்களை சுட்டிக் காட்ட வேண்டிய இருந்ததால் சுட்டிக் காட்டினேன். விஜய் மீது எனக்கு எந்த தனிப்பட்ட வன்மமும் இல்லை.

விசிக திமுக கூட்டணியில் உள்ள கட்சியாகத்தான் அனைவரும் பார்க்கின்றனர். திமுக கூட்டணி என்பது மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி. இந்த கூட்டணியை உருவாக்கியதில் விசிகவுக்கும் ஒரு பங்கு உண்டு. அந்த கூட்டணியின் நோக்கத்தை நோக்கி பயணிப்பதுதான் என்னுடைய தேவையாக இருக்க முடியும். அந்த கூட்டணியை சிதைக்க வேண்டும் என்று நான் ஏன் முடிவு செய்ய வேண்டும்? அந்த கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டிய தேவை எனக்கு என்ன இருக்கிறது? அதற்கான நெருக்கடி எனக்கு எதுவும் இல்லை.

கூட்டணியில் இருந்தால் பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கிறோம். தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளை கண்டிக்கிறோம். நாங்கள் எதுவும் செய்வதில்லை என்று சிலர் சொல்கிறார்கள். அது எங்கள் மீதான காழ்ப்புணர்ச்சி. தி.மு.கவுக்கும், விசிகவுக்கும் இடையே உரசலை ஏற்படுத்தக்கூடிய சில பிரச்சினைகளை நாங்கள் தொடுகிறோம். உள்ளே இருந்து எங்கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்தாலும் கூட இந்த கூட்டணியை சிதைய விடாமல் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு." – என்றார்.

# 2031 இல் திராவிட கட்சிகள் இல்லாத தமிழ்நாடு உருவாகும்

## அண்ணாமலை கணிப்பு



"ஒரு திராவிட கட்சியுடைய வாக்கு மிகப்பெரிய அளவில் இப்போது சரிந்துகொண்டிருக்கிறது. அது காலத்தின் கட்டாயம். அடுத்த தேர்தலில் அதன் வாக்கு வங்கி 12 சதவீதத்துக்கும் கீழே போய்விடும். அது நடந்தே தீரும். அந்த இடத்துக்கு வேறு ஒரு கட்சி வரும். 2026ஆம் ஆண்டு அதற்கான ஆரம்பமாக இருக்கும். 2031 திராவிட கட்சிகள் இல்லாத ஒரு தமிழ்நாடு உருவாகும்"

– இவ்வாறு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தனியார் யூடியூப் சேனல் ஒன்றுக்கு அண்ணாமலை அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில் ,

"தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. அண்டை மாநிலமான ஆந்திராவில் ஜெகன் மோகன் ரெட்டி 40 சதவீத வாக்குகளுடன் ஆட்சியில் அமர்ந்தார். அதே போல மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி 40 வீத வாக்குகள் பெற்று ஆட்சியை தக்கவைக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிலோ 30 முதல் 35 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றன.

திராவிட சித்தாந்தங்கள் காலாவதியாகி வருவதை ஒவ்வொரு தேர்தலும் நமக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. போன தேர்தலில் அதிமுகவின் வாக்கு சதவீதம் குறைந்தது. இந்த தேர்தலில் திமுகவின் வாக்கு சதவீதம் குறைந்தது. இனியும் மக்கள் திராவிட கொள்கையை ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதே இந்த சரிவுக்கு காரணம். 2026ஆம் ஆண்டு கண்டிப்பாக கூட்டணி ஆட்சிதான் அமையும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

ஒரு திராவிட கட்சியுடைய வாக்கு மிகப்பெரிய அளவில் இப்போது சரிந்துகொண்டிருக்கிறது. அது காலத்தின் கட்டாயம். அடுத்த தேர்தலில் அதன் வாக்கு வங்கி 12 சதவீதத்துக்கும் கீழே போய்விடும். அது நடந்தே தீரும். அந்த இடத்துக்கு வேறு ஒரு கட்சி வரும். 2026ஆம் ஆண்டு அதற்கான ஆரம்பமாக இருக்கும். 2031 திராவிட கட்சிகள் இல்லாத ஒரு தமிழ்நாடு உருவாகும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது," – என்று குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்தினால் நிபந்தனைகளுடன் போர் நிறுத்தம்





சில நிபந்தனைகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குத் தயாராக இருக்கிறோம் என ஹெஸ்புல்லாஹ் அமைப்பின் புதிய தலைவர் நயீம் காசிம் கூறியுள்ளார்.

நஸ்ரல்லாவின் மரணத்திற்குப் பின்னர், ஹெஸ்புல்லாஹ் அமைப்பின் புதிய தலைவராக நயீம் காசிம் பதவியேற்றார்.

லெபனானில் இஸ்ரேல் படையினரின் வான் மற்றும் தரைவழி தாக்குதல்கள் தொடரும் நிலையில், இந்த போரை நிறுத்த வேண்டும் எனத் தாம் விரும்புவதாகவும், இஸ்ரேல் முடிவு மேற்கொண்டால், நாங்கள் அதனை ஏற்றுக் கொள்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே அது இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதுபற்றி இஸ்ரேலிடம் இருந்து நம்பத் தக்க எந்தவித முன்மொழிவுகளும் தங்களுக்கு வரவில்லை என்றும் கூறியுள்ளார்.

# தூதரகங்களை உடன் மூடுமாறு ஈரானுக்கு ஜேர்மனி உத்தரவு!










ஈரான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜேர்மனியைச் சேர்ந்த ஜாம்ஸித் ஷர்மத்திற்கு ஈரான் மரண தண்டனையை நிறைவேற்றியது.

இதனால் ஜேர்மனியில் உள்ள மூன்று தூதரகங்களை உடனடியாக மூடுமாறு ஈரானுக்கு ஜேர்மனி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு அமெரிக்காவில் வசித்து வந்த ஷர்மத், துபாய்க்குச் சென்றபோது, ஈரான் பாதுகாப்புப் படையினரால் கடத்தப்பட்டார்.


2023ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற விசாரணையில் ஜே ர்மனி, அமெரிக்கா மற்றும் சர்வதேச உரிமைகள் குழுக்களின் வாதங்கள் பொய்யானவை என ஈரான் நீதிமன்றத்தால் புறக்கணிப்பட்டது.

அதன் அடிப்படையில் ஷர்மத்துக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிராங்பர்ட், ஹம்பர்க், முனிச் ஆகியவற்றில் உள்ள தூதரகங்களை மூட ஜெர்மனி உத்தரவிட்டுள்ளது.

எனினும், பெர்லின் நகரில் மட்டும் ஜேர்மனி தூதரகம் இயங்கும் எனத் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சீனாவிடமிருந்து இலங்கைக்கு 400 மில்லியன் ரூபா உதவி





சுமார் 400 மில்லியன் ரூபாய் பெறுமதியான மனிதாபிமான உதவித் தொகையை இலங்கைக்கு வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சீன தூதரகம் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இது அண்மையில் ஜனாதிபதி அனுர குமாரதிஸாநாயக்கவிற்கு வெள்ள அனர்த்தத்திற்காக வழங்கப்பட்ட 100,000 அமெரிக்க டொலர் உதவிக்கு மேலதிகமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




# இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் 27ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 32,097 இந்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அத்துடன், பிரித்தானியாவில் இருந்து 9,113 பேரும், ஜேர்மனியிலிருந்து 7,609 பேரும் நாட்டுக்கு வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்த மாதத்தின் முதல் 27 நாள்களில் 117,141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.




# சினோபெக் நிறுவனத்தின் எரிபொருள் விலை மாற்றம்

சினோபெக் நிறுவனமும் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், எரிபொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 371 ரூபாவாகும்.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அதன் புதிய விலை 313 ரூபாவாகும்.

ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 311 ரூபா என்ற விலையிலேயே மாற்றமின்றி தொடரும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும், 280 ஆக இருந்த ஒட்டோ டீசல் லீற்றரின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 283 ரூபாவாக உள்ளது.




# பஸ் - லொறி விபத்தில் 14 பெண்களுக்குக் காயம்

பலாங்கொடை - கதிர்காமம் பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் 14 பேர் வரை காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் பெண்கள் பயணித்த பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், பஸ்ஸிக் பயணித்த 14 பெண்கள் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2024




இன்று இனிமையான நாளாக இருக்கும்.உங்கள் கடின முயற்சி மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் புத்திசாலித்தனத்துடன் ஆற்றும் பணிக்காக உங்கள்மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் கீழ்பணிபுரிவோர்களிடமும் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வை தவிர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.உங்கள் குழந்தையின் வளர்ச்சி பற்றிய கவலை உங்களிடம் காணப்படும்.

இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும். எதிர்பாராத வகையில் இன்று பணவரவு காணப்படும்.

தேக ஆரோக்கியம் சிறந்த நிலையில் காணப்படும்.




பல தடைகளுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.உங்கள் மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை அதிகரித்துக்கொண்டே போவதைக் காண்பீர்கள்.பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையின் மனதை காயப்படுத்தும்.நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இதனைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக நீங்கள் கவலைக்குள்ளாவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.




பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள்.கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்.




இன்று நீங்கள்அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் நிதநிலைமையை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.உங்கள் தகுதிக்கு மீறி செலவு செய்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும்.அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள்.உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றி கவலைப்படத் தேவையில்லை.சிறப்பாக இருக்கும்.




சாதகமான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் முன்னேறலாம். ஆன்மீக நோக்கத்திற்கான பயணங்கள் சாதகமான பலன்களைத்தரும்.

உங்கள் சிறந்த பணியாற்றும் முறை காரணமாக நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள்.உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.இதனால் நல்ல புரிந்துணர்வு அமையும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.நீங்கள் உங்கள் உடலை சீராக வைத்திருப்பீர்கள்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக பதட்டங்கள் காணப்படும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது.இன்று குழப்பமான நிலையில் இருப்பீர்கள்.நீங்கள் எடுக்கும் முடிவுகள் தவறாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது.பணிச்சுமை அதிகரித்து காணப்படும்.உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்குள் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடனான தொடர்புகொள்ளலில் பிரச்சினைகள் காணப்படும்.இன்றைய நாளின் வனப்பு அதனால் கெடும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரைஇன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் சேமிக்க வேண்டியது அவசியம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகளை சந்திப்பீர்கள். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2024




புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இன்று பயணங்கள் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் சமநிலையோடு இருங்கள்.இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் காணப்படாது.நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது.உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.இது உங்களுக்கு ஆறுதலைத் தரும். பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கவலைப்படாமல்மகிழ்ச்சியுடன் இருங்கள். கோவிலுக்குச் சென்று வருவது ஆறுதலைத் தரும்.

நீங்கள் செய்த பணிக்கு பாராட்டு பெறுவீர்கள்.பணிகள் ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்.

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள்.அதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும்.உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண்களில் தொற்று போன்ற சிறிய உபாதைகள் காணப்படும்.தகுந்த மருத்துவ சிகிச்சை உங்கள் நலனை பாதுகாக்கும்.




சில தடங்கல்களுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். உங்கள் கவலைகளை மறக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் பணியில் சில அசௌகரியங்களை எதிர்கொள்வீர்கள். பணிச்சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவீர்கள்.

இன்று உங்கள் பேச்சில் கடுமை காணப்படும். இது உங்கள் நாளின் இனிமையைக் கெடுக்கும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கால்களில் வலிகள் ஏற்படலாம்.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

